## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயம் - 2018

---

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான குறிப்புக்கள், பொழிப்புக்களை உள்ளடக்கிய முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆறு மாதத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

காரியாலயத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நிமயங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நிமயங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையில் நிதிக் கூற்று கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு என்னும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்புக் கருத்துரைக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு என்னால் இயலாது போயிற்று.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காரியாலயத்தினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது காரியாலயத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

காரியாலயத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் காரியாலயத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் கணக்காய்வுக்கு அடிப்படையான காரியாலயத்தின் நிதிக்கூற்று குறித்து கணக்காய்வாளரின் அறிக்கையினை சமர்ப்பிப்பது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு கருத்துரைக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்நிதிக்கூற்று தொடர்பான கருத்துரைக்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு என்னால் முடியாது போயிற்று.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கலுக்கான முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடனான செயல்படுத்தல் சம்பந்தப்பட்ட அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பினை பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப்பொறுப்பினை ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றிற்கான நியாயமான உறுதிப்பாடொன்றினை பெற்றுக் கொள்வதற்கு போதுமான முறையாக திட்டமிடப்பட்ட ''திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு'' என்ற உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட:டு முறைமையொன்றினை நிறுவனத்தினால் பேணப்படல் அவசியமாகும்.

#### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுத்துறையின் பொதுத் தேவைப்பாடுகளுக்கான தீர்மானிக்கும் தேவைப்பாட்டுக்காக உபயோகமுள்ள தகவல்களை வழங்கும் நோக்குடன் சகல அம்சமும் அடங்கி முழு அளவிலான நிதிக்கூற்று கோவை ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான தேறிய | 2019 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுடனான காசுப் பாய்ச்சல் கூற்றினையும் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்ட வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றத்திற்கான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இன ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ராஜாங்க அமைச்சினால் 2018 ஆம் வருடத்தினுள் காணாமல் ஆக்கப்பட்டோரின் காரியாலயத்திற்காக மூலதனமல்லாத செலவினமாக ரூபா 24,727,255 வும் மூலதன செலவினமாக ரூபா 9,612,111 வும் முறையாக சேர்த்து ரூபா 34,339,366 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், காணாமல் ஆக்கப்பட்டோரின் காரியாலய நிதிக்கூற்றுக்களில் அரச செலவினம் ரூபா 30,450,000 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,889,366 வேறுபாட்டுக்கான விளக்கத்தினை கணக்காய்வுச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018.07.01 முதல் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலயத்தின் கணக்கின் செயல்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் இந் நிறுவனத்தினால் செய்யப்பட்ட ரூபா 30,450,000 மாத்திரம் இந்த நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. அவ்வாறாயினும், 2018.07.01 இற்கு முன்னதாக அமைச்சினால் இக்காரியாலயத்திற்காக செய்யப்பட்ட ரூபா 24,727,255 க்கான மூலதனம் அல்லாத செலவினமும் ரூபா 9,612,111 க்கான மூலதன செலவினம் தொடர்பான எவ்வித விபரங்களும் இக்காரியாலத்தில் இல்லாததுடன் அச்செலவினங்கள் இந்த காரியாலயத்தினால் செய்யப்பட்ட செலவினம் அல்லாததனால் அவை காணாமல் ஆக்கப்பட்டோரினது காரியாலய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | திறைசேரியினால் அமைச்சினூடாக காரியாலயத்திற்கு வழங்கப்பட்ட சகல மீண்டுவரும் மற்றும் மூலதன மானியங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (இ) | மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 228,647 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. அது போன்று பணிக்குழாமினை பயிற்சியளிப்பதற்காக மீளாய்வாண்டினுள் செய்யப்பட்ட ரூபா 150,750 விற்கான செலவினம் நிதிநிலைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் | எதிர்வரும் வருடங்களில் சம்பந்தப்பட்ட செலவினங்கள் வருடத்திற்கான மூலதனமல்லாத செலவினமாக சரியாக கணக்கிலிடவும் இச்செலவினங்களை 2019 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யவும் குறித்துக் கொள்ளப்பட்டது. | செலவினங்கள் சரியாகப் பிரிக்கப்பட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | ஐக்கிய நாடுகள் சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட 5 லெப்டொப் கணனிகளின் பெறுமதியான ரூபா 990,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட சொத்துக்களை கணக்கிலிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சொத்துக்களை சரியாக கணக்கிலிடுவதற்கும் அச்சொத்துக்கள், சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (உ) | 127 வகையான காரியாலய உபகரணங்கள், 07 யூ.பீ.எஸ், 07 அச்சு இயந்திரங்கள், 01 பொட்மோ கொப்பி இயந்திரம், 01 பெக்ஸ் இயந்திரம் மீளாய்வாண்டினுள் அமைச்சினால் இக்காரியாலயத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் அச்சொத்துக்களின் பெறுமதியினை அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சம்பந்தப்பட்ட தகவல்களை அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 1.6 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டம், ஒழுங்கு, பிரமாணங்கள் ஆகியவற்றின் கவனத்திற்கு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12/2003 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | 2018 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2019 செப்தெம்பர் 04 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நம் நிறுவனத்தில் கணக்கீட்டு செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 2018.12.31 ஆந் திகதிக்கு 06 மாதம் சென்றுள்ளது. பயிற்சி பெற்ற பணிக்குழாமினது குறைபாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்ததுடன் இப்போது நிரந்தர பணிக் குழாமை சேர்த்துக் கொள்ளபடுவதனால் முன்னால் இத்தகைய தவறுகளை தவிர்த்துக் கொள்ளலாம். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயல்பட வேண்டியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | 2018 ஆம் வருடத்திற்கான பொருட் கணிப்பு அறிக்கைகளை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரதும் பிரதியொன்று வைக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டி இருப்பினும் 2019 மே 31 ஆந் திகதி வரை பொருட் கணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணிப்பு சபைகளுக்கு நியமிப்பதற்கு தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது நிரந்தர பணிக்குழாம் சேர்த்துக் கொள்ளப்படுவதனால் இது போன்ற நிலைமையினை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளலாம். 2018 வருடத்திற்கான நிலையான சொத்துக்கான கணிப்புக்கள் இப்போதைக்கு முடிவடைந்துள்ளன. | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் ஆறு மாதத்திற்கான நடவடிக்கை பெறுபேறுகளில் ரூபா 2,076,345 க்கான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் 28 ஆயினும், உண்மையான பணிக்குழாமின் 22 பேரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாக இருந்ததுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையினை தாமதமாக இருந்த போதிலும், காரியாலயத்திற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டி இருந்தமையினால் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. | நிரந்தர பணிக் குழாமினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |